**மதவாச்சி பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 மே 13 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 10 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மதவாச்சி பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்திடமிருந்து கிடைத்த 10 செயற்திட்டங்களுக்குரிய மூலதன பெறுவனவுகள மற்று் செலவினங்கள் ரூபா 17,546,351 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆண்டுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் நிதி கூற்றுக்களில் சரியாகக் காண்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ii) | சபைக்கு கிடைத்திருந்த புறநெகும கடைகளுக்கான வைப்புக்கள் ரூபா 6,803,877 பொறுப்பொன்று கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அத்தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்த வங்கிக் கணக்கு மாத்திரம் | சரியாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்தொன்றாக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி மன்றத் திணைனக்களம் மற்றும் அமைச்சின் நிதிஏற்பாடுகளின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்ட 13 செயற்திட்டங்களுக்குரிய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 7,403,230 நிதிக்கூற்றுகக்ளில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆண்டுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் நிதி கூற்றுக்களில் சரியாகக் காண்பிக்கப் | பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிர்மாணங்கள் கணக்கீடு செய்யப்படாமையால் அம்மீதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | மதவாச்சி புதிய பஸ் நிறுத்துமிட பொது வியாபார கடை தொகுதிக்குரிய 46 கடைகளில் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 8,253,000 மற்றும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய நிலுவை வாடகை 10,997,000 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சரியாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் ஆரம்ப கணக்கு வைப்பின் போது சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | இரண்டு தீர்வையாகாத வைப்புக்கள் மற்றும் மூன்று மிகை கொடுப்பனவு அறவீடுகளின் பெறுமதி ரூபா 217,180 வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அரச வருமானத்தின் பெயரில் கடன்கொடுத்தோர் பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஏதேனும் சிக்கல் வாய்ந்த விடயமொன்று உருவாகினால் அந்நிலைமையை தீர்வு செய்வதற்கு நேர்வதால் அப்பெறுமதி பொறுப்பொன்றாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் போது திரண்ட நிதியத்திற்கு அம்மீதிகளை செலவு வைக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | மீளாய்வாண்டில் ரூபா 516,270 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 782,170 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 265,900 கூடுதலாக காண்பிக்கபட்டிருந்தது. | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இந்தப் பணத் தொகை வருமானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் வருவாய் ஆணையர் ஜெனரலுக்கு சரியான விதத்தில் காலாண்டுக்கு ஒரு தடவை செலுத்தி வரப்பட்டிருக்கிறது. இனி வரும் காலத்தில் இந்தக் கொடுக்கல் வாங்கலை சரியான விதத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (vii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 222,600 மறுக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இவ்வாண்டின் போது மறுக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதியை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 வரை 06 கணக்கு விடயங்களுக்குரிய பதிவேடுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 1,942,028 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 8,167,511 ஆக ரூ காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 6,225,483 கூட்டு வேறுபாடு காணப்பட்டது. | தொடர்புடைய மீதிகளில் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்கைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விடயங்களைக் கருத்திற் கொண்டு சரியாக கணக்குகளை தயாரிக்க நடவடிக்க எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதி ரூபா 10,795,878 ஆக இருந்த போதும் அத்திகதியில் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அக்கடன் மீதி ரூபா 10,402,103 ஆக இருந்தமையால் ரூபா 393,375 ஆன வேறுபாடு காணப்பட்டது. | தொடர்புடைய மீதிகளில் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்கைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்துடன் கலந்துரையாடி மீதிகளை உறுதிப்படுத்துவதற்கும் செலுத்த வேண்டிய கடன் தவணை தொடர்பாக சரியான தீர்வொன்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 உள்ளவாறு மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் கழிப்பனவுகளாக நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 5,269,714 தொகையான செலுத்த வேண்டிய 02 வைப்புக் கணக்குகளில் அசாதாரண நிச்சயமற்ற மீதியொன்று தொடர்பாக ஆராய்ந்து பார்த்து கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு தொங்கல் கணக்கு தீர்வுசெய்யப்பட வேண்டும். | இது சம்பந்தமான கடந்த ஆண்டுகளின் தகவல்கள் ஆராயப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,631,149 ஆன பெற வேண்டிய 04 கணக்கு மீதிகள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு காணப்பட்டது | கிடைக்க வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது சம்பந்தமான முன்னைய ஆண்டுகளின் தகவல்கள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,618,325 ஆன செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு காணப்பட்டது | செலுத்த வேண்டிய தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| (iii) | முன்னைய ஆண்டுகளில் ரூபா 26,218 வெட் வரி மற்றும் ரூபா 32,647 ஆன முத்திரை வரி என்பவற்றை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தற்கு தீர்வு செய்வதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

**(உ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 592,480,467 பெறுமதியுடைய 08 கணக்கு விடயங்களுக்குரிய ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்த எழுத்து மூல சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், நிதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்ளுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1951 இலக்கம் 14 மோட்டார் வாகன சட்டம் | | | | ஏற்றுக்கொள்கிறேன். |
| | i. 99(1) மற்றும் 104(1) | | சபையின் 07 வாகனங்கள் காப்புறுதி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| | ii. 25(1) ஆம் பிரிவு | | சபையின் 07 வாகனங்கள் வருமான அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட 1533/16 ஆம் இலக்க 2018/01/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஆவது பிரிவு | | மஹ சியம்பலாகஸ்கட மற்றும் முஸ்லிம் ஹல்மில்லேவ ஆகிய மாடுகள் கொல்லப்படும் இடங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாடுகள் அறுக்கும் இடங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பதிரம் பெற்றுக்கொள்ள ஆலோசணை வழங்ககப்பட்டுள்ளது. |
| (இ) | 1988 இன ஆகஸ்ட் 23 ஆந் திகதிய உப விதி வர்த்தமானி அறிவத்தலின் 32 ஆவதுது உப | 1,042,660 | சபை அதிகாரப் பிரதேசத்தில் மாடுகள் கொல்லுமிடங்களில் மிருகங்களை பரீட்சித்தல் மற்றும் இலட்சிணையிடல் | உப விதிகளின் பிரகாரம் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட | நிறைவேற்றப்பட்ட உறுப்புரையில் குறிப்பிட்ட தொகைக்கு பொது சபை தீர்மானம் எடுத்து வர்த்தமானியில் வெளியிட்டு உரிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விதியின் 09 ஆம் பிரிவு | | என்பவற்றிகாக கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை | வேண்டும். | கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 189 | 222,000 | 2019 பெப்ரவரி மாதம் மறுக்கப்பட்டிருந்த காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வாண்டில் மறுக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி தீர்வு செய்யப்படும். |
| (உ) | 2016 திசெம்பர் 27 திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | | சபைக்குரிய 03 வாகனங்கள் சம்பந்தமான எரிபொருள் எரிவு சோதனை பற்றிய பரிசோதனை செய்யப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஊ) | 2002 யூலை 24 ஆந் திகதிய வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் 20/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை | 78,910 | வீதிக்கோடு, கட்டிடங்கள் இணை பிரிவு அறவிட்டு பரிசோதனை கட்டணங்களில் 50 சதவீதம் உரிய உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக முழுத்தொகயும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன்.உத்தி யோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

--------------------.

### 2.1 நிதி விளைவுகள்

--------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,093,356 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 320,733 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,309,558 | 859,724 | 780,023 | 1,281,522 | 2,258,910 | 2,266,365 | 2,179,640 | 1,201,821 |
| (ii) | வாடகை | 17,503,600 | 5,588,110 | 5,503,849 | 2,091,277 | 13,283,400 | 6,027,630 | 6,387,150 | 2,007,016 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,486,450 | 6,197,926 | 6,197,926 | 505,700 | 4,776,560 | 5,178,613 | 5,178,613 | 505,700 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,304,318 | 4,211,033 | 3,168,679 | 3,163,575 | 2,316,285 | 2,226,392 | 7,652,004 | 2,121,221 |
| | மொத்தம் | 27,603,926 | 16,856,793 | 15,650,477 | 7,042,074 | 22,635,155 | 15,699,000 | 21,397,407 | 5,835,758 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 33 பிரகாரம் கொடுப்பனவு நிராகரிப்போர் தொடர்பான பட்டியல் மற்றும் சொத்துக்களை தடை செய்யும் பிடியாணை பத்திரப் பட்டியல் ஒவ்வொரு காலாண்டு நிறைவிலும் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | விதி 33 பிரகாரம் நிலுவைகளை அறவிடுவதற்கும் நிராகரிப்போர் தொடர்பான தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னைய ஆண்டுகளின் நிலுவையாகும் தற்போது வீதவரி மதிப்பீடு செய்வதற்கு GPRS தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வீதவரி வலயம் வரைபடமாக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி வரி அறவிடப்பட்டிருந்த போதும் புதிய கட்டுமானம், திருத்தங்கள் ஆகியவற்றின் மீது வீத வரி அறவீடு தவிர்க்கப்பட்டிருந்தது. | திருத்தங்கள் மேற்கொண்டு கட்டணங்களை அறவிடப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 திசெம்பர் 31 இல் 39 கடைகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 777,123 தொகையான இறைச்சிக் கடை, மீன் கடை ஆகியவற்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,314,153 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | முன்னைய ஆண்டுகளிலிருந்து வரு் மீதி ரூபா 1,037,693 ஆகும். முன்னைய ஆண்டுகளில் இருந்து வரும் நிலுவை மீதிகள் ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி நடவடிக்கைளை எடுக்கப்பட்டு வருகின்றது. நடப்பாண்டில் நிலுவை தொகையின் ஒரு பகுதி இதுவரை அறவிடப்பட்டிருந்தது. |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அதிகார பிரதேசத்திலிருக்கும் விளம்பர பதாதைகள் சம்பந்தமாக ஆய்வொன்றை நடத்தி கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பதிவேடுகள் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | பிரதேசத்தில் அமைந்துள்ள விளம்பரப் பதாதைகள் குறித்து ஆய்வொன்றை நடத்தி அவை சம்பந்தமான ஆவணமொன்றைத் பராமரிக்கப்படுவதுடன் கட்டணங்களை அறவிட உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறேன். |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 முதல் 2019 ஆண்டுகளுக்குரிய பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களடமிருந்தும் கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணப் பெறுமதியைக் கணக்கிட்டு அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானத்தை உடனடியாக அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண வருமானத்தில் இதுவரை பரிந்துரைத்த கட்டணங்கள் மாகாண இறைவரித் திணைக்களத்திடமிருந்து கிடைத்துள்ளன. மாகாண இறைவரி திணைக்களத்திலிருந்து |

அறியத் தந்ததும் முத்திரைக் கட்டணத்தை கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட 28 விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரை சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்த துணை விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | துணை விதிகளை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விதிக்கப்பட்ட ஏற்றுக கொள்ளப்பட்ட உறுப்புரைகள் பின்பற்றப்பட்டுள்ளன. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குித்த நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்துகொண்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 17 ஐ அடைந்துகொள்ள 2020 செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புறநெகும செயற்திட்டத்தன் கீழ் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 46 கடைகள் வாடகை அடிப்படையில் உடன்படிக்கை செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்த போதும் கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய போதிலும் உரிய கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 19,250,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடைகளிலிருந்து நிலுவை தொகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தற்போது சபையில் சேவை புரியாத உத்தியோகத்தர்களிடமிருந்து 01 ஆண்டு முததல் 20 ஆண்டுகளாக அறவிடப்படாத ஊழியர் கடன் மீதி ரூபா 556,258 ஆக இருந்தது. | உரிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கும் அறவிட முடியாத மீதிகளை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க உளளேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் 03 மாதங்கள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் விளைவற்றுக் காணப்பட்டன. | திருத்தியமைக்கவோ அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிரக்ாலத்தில் குறித்த சிக்கல்களை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 95,301,489 தொகையான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி சபையினால் நியமிக்கப்பட்டிருந்த குழுவொன்றின் மதிப்பீட்டை அடிபபடையாக கொண்டு ரூபா 574,042,740 என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளமையினால் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி 502 சதவீதத்தினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | மதிப்பீடு தொடர்பான விசேடத்துவ அறிவுடன் கூடிய குழுவொன்று மூலம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் | 2019.12.18 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவு குழுவில் கலந்துரையாடியதன் பிரகாரம் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் உட்பட குழுவொன்றின் மூலம் அளவீடுகள் மேற் கொள்ளப்பட்டு தற்காலிக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டது. |

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. |

**4.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டிறகான அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தீர்வு செய்யப்படாத ரூபா 3,007,024 தொகையான 06 கணக்காய்வுப் பந்திகள் மேலும் காணப்பட்டன. | கணக்காய்வு விசாரணை தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | குறித்த விசாரணை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் தேவையான ஆலோசணைகளை உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |